**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண். 191/2019**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : | அருள்தாஸ் | P.W.2. Cross |
| த/பெ. | : | வில்லியம்ஸ் | |
| தேதி | : | 24.11.2025 | |

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**1, 8, 9 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை: –**

1. வாதி என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் தனலெட்சுமி கிரயம பெற்றது செல்லாது என்று தான் கிரயம் பெற்ற கிரய ஆவணம் செல்லத்தக்கது என்றும் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். வாதி இரண்டு சர்வே எண்களில் கிரயம் பெற்றுள்ளார். இரண்டு சர்வே எண்களுக்கும் ஒரே நான்கெல்லை தான். வாதி கிரயம் பெற்ற கிரய ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதி கிரயம் பெற்ற கிரய ஆவணத்தை நான் எப்போது பார்த்தேன் என்றால் 2016ம் ஆண்டு பாரத்தேன். அதன் பிறகு நான் பார்த்தேனா என்றால் இல்லை. சர்வே எண் 320ன் மொத்த திட்ட விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த சர்வே எண்ணில் 2,3 ஏக்கர் இருக்கும்.

2. சர்வே எண் 320 எப்போது உட்பிரிவு செய்யப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. மார்கண்டன் காந்திமதிக்கு விற்கும் போது மேற்படி புல எண் உட்பிரிவு செய்யப்படாமல் இருந்தது. காந்திமதி வாதிக்கு கிரயம் செய்து கொடுக்கும் போது மேற்படி புல எண் உட்பிரிவு செய்யப்பட்டிருந்தது. சர்வே எண் 320 ன் மொத்த விஸ்தீரணமும் மார்கண்டனுக்கு பாத்தியப்பட்டதாக இருந்தது என்றால் சரிதான். மார்கண்டன் குடும்பத்திற்கு காழியப்பநல்லூரில் சுமார் 60 வேலி நிலங்கள் இருந்தன.

3. மார்கண்டனின் உடன்பிறந்தவர்கள் அவரையும் சேர்த்து நால்வர் ஆவர். காந்திமதி கிரயம் பெற்ற பிறகு அவர்கள் பெயரில் பட்டா மாறியதா என்றால் இல்லை. வாதி பிழைத்திருத்தல் ஆவணம் செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 6, 7 பிரதிவாதிகள் இந்த வழக்கில் கட்சி செய்துள்ளார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. காந்திமதி பெயரில் தாவா சொத்தை பொறுத்து எந்த ஆண்டு கிரயம் ஆவணம் ஏற்பட்டது என்றால் 1983ம் ஆண்டு ஏற்பட்டது. காந்திமதி கிரயம் பெற்ற கிரய ஆவணத்தில் கண்டுள்ள நான்கெல்லை தான் வாதி கிரயம் பெற்ற கிரய ஆவணத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே

எண். 320/11 ன் திட்டவிஸ்தீரணம் 68 செண்ட் ஆகும். சர்வே எண் 320/11ல் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

4. சர்வே எண்.320/11 ஆனது சர்வே எண். 320/11A, 320/11B1, 320/11B2, 320/11C என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கும் புல எண். 320/11ற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. சர்வே எண். 320/11 என்பது 1ம் பிரதிவாதி தனலெட்சுமிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றாலும், காந்திமதிக்கு பாத்தியப்பட்டது அல்ல என்றாலும் சரியல்ல. தனலெட்சுமி கிரயம் பெற்ற சொத்தின் நான்கெல்லை என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சர்வே எண். 365/1ல் 41 ஏர்ஸ் சர்ச்க்கு சொந்தமான சொத்தை எனது பெயரில் பட்டா மாற்றம் செய்து கொண்டேன் என்றாலும், அதற்கு பின் பொது மக்கள் மனு செய்ததன் அடிப்படையில் மேற்படி பட்டா ரத்து செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. சர்வே எண். 368 B/4A ல் 2.5 ஏர்ஸ், சர்வே எண்.402/11Aல் 6 ஏர்ஸ் அரசுக்கு சொந்தமான நத்தம் வகைப்பாட்டை எனது பெயரில் பட்டா மாற்றம் செய்தேன் என்றால் சரியல்ல.

5. நான் எனது நிருபண வாக்குமூலத்தில் வாதி தாவா சொத்தில் என்ன பயிர் செய்துள்ளார் என்று சொல்லியுள்ளேனா என்றால் தற்போது நினைவில் இல்லை. வாதியிடமிருந்து தனலெட்சுமி வழக்கு சொத்துகளை கிரயம் பெற வாய் மொழி ஒப்பந்தம் எந்த தேதியில் ஏற்பட்டது என்று எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் 2015ம் ஆண்டில் ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன். தேதி மாதம் குறிப்பிடவில்லை. தாவா சொத்துகளை 2016ம் ஆண்டில் அளவீடு செய்யும் போது நான் உடனிருந்தேனா என்றால் இருந்தேன். வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு கொடுத்து தான் அளவீடு செய்யப்பட்டது. எந்த தேதியில் அளக்கபட்டது என்று தேதி மாதம் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. தரங்கம்பாடி தாலுக்கா சர்வேயர் தான் அளவீடு செய்தார். அளவீடு செய்ததற்கான அறிக்கை வாதியிடம் கொடுத்தார்களா என்றால் கொடுத்தாக சொன்னார்கள். ஆனால் கொடுத்தார்களா என்று எனக்கு தெரியாது. காந்திமதி வாதிக்கு விற்ற அதே சொத்துகளை தான் மார்கண்டனின் வாரிசுகளான 2 முதல் 5 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதிக்கு விற்றதாக நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

6. தனலெட்சுமி வாங்கிய ஆவணம் போலியான ஆவணம் ஆகும். தனலெட்சுமி வாங்கிய ஆவணம் போலியானது என்பது குறித்து வாதி இந்த வழக்கை தவிர வேறு சட்ட நடவடிக்கைகள் ஏதேனும் எடுத்தாரா என்றால் காவல் நிலையத்தில்

புகார் கொடுத்தார், வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு கொடுத்தார். எப்போது வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு கொடுத்தார் என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு சுமார் 2 மாதங்களுக்கு முன்பு மனு கொடுத்தார். தாவா சொத்திற்கு வறட்சி நிவாரணம், வெள்ள நிவாரணம் வாங்கியுள்ளாரா என்றால் தாவா சொத்து திடல் என்பதால் அதற்கு மேற்படி நிவாரணங்கள் கிடையாது. மேற்படி நிவாரங்கள் திடலுக்கு கிடையாது என இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி நிலத்தில் வேர்கடலை பயிர் செய்தால் நிவாரணம் உண்டு.

7. சர்வே எண். 320/5B மற்றும் 320/5C சொத்துகள் எங்கு உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதி கிரயம் பெற்ற சொத்து தான் சர்வே எண். 320/11 என்பதை நிரூபிக்க வாதி நீதிமன்றத்தில் வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்யக்கோரி மனு செய்துள்ளாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி தனலெட்சுமி கிரயம் பெற்ற சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் பொய்யான நான்கெல்லைகளை கூறி வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் வாதியிடம் பணம் பெற்றுக்கொண்டு அவருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**10 முதல் 14 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்க இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**